முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

20.06.2019

அ.வ.எண். 250/2015

வா.சா. 1 அமுதா

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் வாதி ஆவேன். வா.சா.ஆ.1 மூலம் சொத்தை விலைக்க வாங்குவதற்கு முன்பு அச்சொத்து தொடர்பான பட்டா மற்றும் ஆவணங்களை சரிபார்த்தேன் என்றால் பார்க்கவில்லை. எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் நபருக்கு சொத்து எப்படி பாத்தியம் என்று நான் ஆவணங்களை பார்த்தேனா? என்றால் நான் பார்க்கவில்லை. ஆனால், ஆவணங்கள் இருப்பதாக சொன்னார்கள். அது என்ன ஆவணம் என்றால் பிரமாணம் ஆகும். அது என்ன பிரமாணம் என்றால், பூதலிங்கம் என்பவரின் பிரமாணம் ஆகும். வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் எத்தனை சொத்துகள் நான் வாங்கினேன் என்றால், ஒரு சொத்து தான் வாங்கினேன். எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் அருணாச்சலம் அம்மாளுக்கு கேரள மாநிலம் நெய்யாற்றின் கரை என்ற ஊரில் சொத்து எதுவும் கிடையாது என்றால் ஆமாம். அவருக்கு வழக்கு பட்டிகை சொத்தை தவிர, வேறு சொத்துகள் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் அருணாச்சலம் அம்மாளுக்கு சொத்து எவ்வாறு கிடைக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா? என்றால் சொல்லப்பட்டுள்ளது. அதில் எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் அருணாச்சலம் அம்மாளுக்கு அவரது மாமா இஷ்டதான பத்திரம் எழுதிக் கொடுததாக வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டது. வா.சா.ஆ.1 ல் பூர்விகமாக கிடைக்கப்பட்ட சொத்து என்று தான் அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது அவர்களுக்கு உரிமைப்பட்டது என்றால் அவ்வாறு சொல்லப்பட்டது. அருணாச்சலம் அம்மாளின் மாமனார் எப்படி சொத்தை கொடுத்தாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை. பங்கு வைத்து ஒரு பங்கை கொடுத்ததாக நான் சொல்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் பட்டா எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான. வா.சா.ஆ.1 ஆவணம் தமிழ்நாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்பிக்கபட்டு ஏற்புடை செய்யப்படவிலலை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்ட 1ம் இன சொத்தானது திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், எனவே அதனை குறித்து தமிழ்நாட்டில் பத்திர பதிவு செய்யப்பட மாட்டாது என்பதால் தான், சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு நானும், என் கணவரும், அருணாச்சல அம்மாளும் சேர்ந்து மோசடி ஆவணம் பிறப்பித்தோம் என்றால் சரியல்ல. வீட்டு வரியானது எவ்வளவு காலமாக என் கணவர் பேரில் உள்ளது என்றால் 30 ஆண்டு காலமாக உள்ளது. வா.சா.ஆ.1 ல் கண்ட 1ம் இன சொத்தில் வீடுகள் இருப்பதாகவோ, வீட்டு வரி ஏற்பட்டதாகவோ அதில் சொல்லப்படவில்லை என்றால் வாங்கும் போது நாங்கள் இடமாகத் தான் வாங்கினோம். அதன் பிறகு தான் வீடு கட்டினோம். வீடு கட்டுவதற்கு நகராட்சியில் உரிய அனுமதி பெற்றோமா? என்றால் பெற்றோம். அது எந்த வருடம் என்றால் நினைவில்லை. அவ்வாறு, அனுமதி பெற்றதாக நான் சொல்லும் அனுமதி உத்தரவு என் கைவசம் உள்ளது என்றால் ஆமாம். அந்த அனுமதி உத்தரவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு, நாங்கள எவ்வித அனுமதியும் நகராட்சியில் வாங்கவில்லை என்றாலும், திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஆக்கிரமித்து, அத்துமீறி ஆக்கிரமிப்பாளாராக உள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய ஆவணத்தில் கண்ட கையொப்பமானது என் கணவரான 1ம் வாதியின் கையொப்பம் என்றால் சரிதான். மேற்படி, கையெழுத்து அடங்கிய ஆவணம் என் கணவரால் கொடுக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், அதில் உள்ள கையொப்பம் என் கணவருடையது ஆகும். ஆனால் அந்த கையொப்பம் மட்டும் பி.வா.சா.ஆ.1 ஆகும். என் கணவர் த.வா. சொத்து சம்மந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் செய்தார் என்று எனக்கு தெரியாது. எனவே, த.வா. சொத்து சம்மந்தமாக என்னுடைய கணவரால் தான் முறையாக, முழுமையாக சாட்சியம் அளிக்க முடியும் என்றால் அவர் சாட்சியம்

அளிக்க வருவார். என்னுடைய பிரமாண வாக்குமூலம் என்னுடைய தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இரண்டாம் பக்கத்தில் 5வது வரியில் 2007 ம் வருடம் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் அலுவலர்கள் எங்களிடம் சொத்தில் எங்கள் உரிமை ஆவணங்களை சமா்ப்பிக்க கோரினா் என்றும், அவைகளை நாங்கள் சமா்பித்தோம் என்றும் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். அதை எந்த தேதியில் எந்த கடித்தின் மூலம் நாங்கள் சமா்ப்பித்தோம் என்றால், அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. 1,2 பிரதிவாதியிடமிருந்து எந்த கடிதமும் எங்கலுககு வரவில்லை என்றாலும், 3ம் பிரதிவாதியிடமிருந்து 17.07.2007 ம் தேதி கடிதம் வந்தது என்றால் சரிதான். அதற்குள்ள பதில் தான் என்னிடம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதம் பி.வா.சா.ஆ.2 ஆகும்.(அஞ்சல் உறையுடன் கூடியதாகும்) பி.வா.சா.ஆ.2 ல் சொத்து பார்வதிபுரம், யாதவா சமுதாயத்திற்கு உட்பட்ட உடமூட்டு தருமம் வகை சொத்தாகும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 ல் அருணாச்சலம் அம்மாள் த.வா.சொத்தானது யாதவா சமுதாயத்திற்கு உட்பட்ட உடமூட்டு தரும வகை காரியத்திற்கான சொத்து என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால், அவா் 100 வருடமாக அந்த இடத்தில் இருந்து வந்தாா். எனக்கு 60 வயதாகிறது. எனக்கு த.வா. சொத்தை பற்றி எவ்வளவு காலமாக தெரியுமா? என்றால் சொத்தை விலைக்கு வாங்கிய பிறகு தான் 30 ஆண்டு காலமாக தெரியும். நான் சொல்வது போல, 100 வருட காலம் அருணாச்சலம் அம்மாள் அங்கு இருந்தார் என்று நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எனது தாய் மாமா சொல்லி தான் தெரியும். எனது தாய் மாமா இருந்த வீடும் தரும கோவில் சொத்து தான் என்றால், ஆமாம். அந்த உடமூட்டு தருமத்திற்கு பத்மநாப கோனாா் டிரஸ்டியாக இருந்தாா் என்றால் ஆமாம். அந்த பத்மநாப கோனாா் எந்த வருடம் இறந்து போனாா் என்றால், 1977,1980 ம் ஆண்டு இறந்திருப்பாா். மற்றொரு டிரஸ்டியாக இருந்த பழனிக்கோனாா் என்பவரும் அதே ஆண்டில் இறந்து போனாா். அதன் பிறகு, சொத்துகள் பராமரிக்கப்படாமல், பராதினப்படுத்தப்பட்டது என்றால், அறநிலைத்துறை தக்காரை நியமித்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அது சம்மந்தமாக பழனிக்கோனாரின் வாரிசுகளை அழைத்து விசாரணை செய்தாா்கள் என்றால் தெரியவில்லை. எனக்கு த.வா. சொத்தில் உரிமை கிடையாது என்றால் நாங்கள் விலைக்கு வாங்கியுள்ளோம். நாங்கள் உடமூட்டு தருமத்திடம் இருந்தோ, அந்த தருமத்தின் நிர்வாகிகளிடமிருந்தோ த.வா. சொத்தை முறையாக விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். நாங்கள அருணாச்சல அம்மாளை உரிமையாளா் என்று நினைத்து விலைக்க வாங்கியுள்ளோம். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக கூறப்பட்டுள்ள நபா் என்ற பேரில் ஒரு பதவி உண்டா? என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 24.09.2014 ம் ஆண்டில் எங்கள் வீட்டிற்கு யாராவது வந்தாா்கள் என்றால் வரவில்லை. எங்கள் வீட்டிற்கு யாரும் வந்து எங்களை அச்சுறுத்தவில்லை என்றால் சரிதான். ஆனால் பக்கத்து சந்திரன் வீட்டில் காம்பவுண்ட், சுவரை அப்புறப்படுத்தினாா்கள். எனவே, அப்படி நமக்கும் நோ்ந்து விடுமோ என்று நினைத்து பயந்து இந்த வழக்கை நாங்கள் தாக்கல செய்தோம் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதியின் பொறியாளா் வந்து எங்கள் கைவசம் இருந்த இடத்தை அளக்க வந்தாா்கள் என்றால் வரவில்லை. வெளியில் நின்று பாா்த்துவிட்டு சென்று விட்டாா். நடக்காத சம்பவத்திற்கு நாங்கள் அரசு அதிகாரிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் மனு கொடுத்தோம் என்றால், நான கொடுக்கவில்லை பிறா் கொடுத்தாா்கள். எங்கள் வீட்டில் எவ்வித துன்பமும் செய்ய வரவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலம், பிராது ஆகியவற்றில் 06.06.2015 ம் தேதியில் எங்கள் வீட்டிற்கு வந்து 1 முதல் 3 பிரதிவாதியின் வகையாட்கள் எங்களை பயமுறுத்தல் செய்தனா் என்று கூறியிருப்பது என்றால் ஆமாம். த.வா.சொத்தானது உடமூட்டு தருமத்திற்கு பாத்தியமானது என்று தெள்ளத்தெளிவாக தெரிந்து கொண்டு அருணாச்சல அம்மாளின் உறுதுணையோடு மோசடி ஆவணம் பிறப்பித்து, அதன் அடிப்படையில் பொது தருமத்திற்குள்ள சொத்தை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியான திருநெல்வேலி இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையாளா் முன்பாக இந்து சமய அறநிலையச் சட்டம் பிரிவு 78 ன படி

மனுதாக்கல செய்து, அதில் எங்களுக்கு எதிராக ஒரு தரப்பு நிலை உத்தரவு பிறந்துள்ளது என்றாலும், தற்போது அந்த உத்தரவை நீக்கரவு செய்து அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அரசு அதிகாரிகளையும், திருக்கோவில் பணியாளர்களையும் துன்பபடுத்தும் நோக்கோடு கற்பனையாக நடக்காத சம்பவத்தை நடந்தது போல, கூறி கற்பனையான மூல காரணத்தை கூறி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய மூல காரணம் இல்லாததால் இந்த வழக்கை நிலைக்க செய்வது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் வரி விதிப்பை பெற்றதும், மின் வாரிய அலுவலகத்தில் எங்கள் பெயரில் மின் இணைப்பை பெற்றதும் எங்கள் பகுதியல் அப்போது உறவினராக இருந்த எங்களுக்கு தெரிந்த உதயகுமார் என்பவா மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருக்கும் வீடு எவ்வளவு சதுர அடி என்றால் தெரியாது. 3 செண்ட்டிலும் வீடு இருக்கிறது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2.33 செண்ட் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் 3ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.